டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 14.02.2026 சனிக்கிழமை | பக்கங்கள் 30 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 195 - Madurai | Online Edition

# இந்திய சுனாமி எச்சரிக்கை மையம் உரிய முறையில் செயல்படுகிறது

## மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தகவல்

புது தில்லி, பிப்.13

இந்தியப் பெருங்கடலில் 2004 டிசம்பர் மாதத்தில் சுனாமி ஏற்பட்டதையடுத்து மத்திய புவி அறிவியல் அமைச்சகத்தின் கீழ், ஐதராபாத்தில் அமைந்துள்ள இந்திய பெருங்கடல் தகவல் சேவைக் கான தேசிய மையத்தில் இந்திய சுனாமி எச்சரிக்கை மையத்தை மத்திய அரசு ஏற்படுத்தியது. 2007 அக்டோபர் 15 முதல் செயல் படும் இந்த மையம் நில அதிர்வு, கடல் மட்டத்தைக் கண்காணித்தல் ஆகியவற்றிற்கு மேம்பட்ட முறைகளைப் பயன்படுத்துகிறது. இதன் மூலம் பத்து நிமிடங்களுக்குள் சுனாமியுடன் நில நடுக்கம் குறித்து கண்டறிந்து வழிகாட்டு நெறிமுறைகளின் படி சுனாமி அறிவுரை களை வழங்குகிறது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் 6.5 அல்லது அதற்கு அதிகமான ரிக்டர் அளவில் இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் 8 நில நடுக்கங்கள் உட்பட 143 சுனாமியுடன் கூடிய நிலநடுக்கங்களை கண்டறிந்துள்ளது. ஒவ்வொரு நிகழ்விலும் இந்த மையம் விரிவாக மதிப்பீடு செய்து இந்தியா மற்றும் இந்தியப் பெருங்கடல் பகுதியில் சுனாமி அச்சுறுத்தல் ஏதுமில்லை என்று உறுதிப்படுத்தியது. இந்த மையம் தொடர்ந்து உரிய நேரத்தில் சுனாமி எச்சரிக்கை அறிவுறுத் தல்களை அளித்து வருகிறது. அதேபோல், கடந்த ஐந்து ஆண்டு களில் சுனாமி முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்காக 8 சுனாமி ஒத்திகைப் பயிற்சி நடைபெற்றுள்ளது. இவற்றில் இந்தியப் பெருங் கடல் பிராந்திய அளவில் 2023 அக்டோபர், 2025 அக்டோபர் – நவம்பர் மாதங்களில் 2 பயிற்சிகள் நடைபெற்றன. அத்துடன், தேசிய மற்றும் மாநில அளவில் 6 சுனாமி ஒத்திகைப் பயிற்சிகள் நடைபெற்றுள்ளன.

இத்தகவலை மத்திய புவி அறிவியல் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் மாநிலங்களவையில் தெரிவித்தார்.

# உயிர்ம வேளாண்மை கண்காட்சி மற்றும் கருத்தரங்கம்



புதுக்கோட்டை, பிப்.13

புதுக்கோட்டை மாவட்டத்தில் வேளாண்மை தொழில்நுட்ப முகமை (அட்மா) திட்டத்தின் மூலம் உயிர்ம வேளாண்மை விழிப்புணர்வு கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் 13.02.26 அன்று பி.வி.ஆர் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இக்கண்காட்சியில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் கலந்து கொண்டு குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்.

இக்கண்காட்சியில் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் வை.முத்துராஜா மற்றும் மேயர் திலகவதி செந்தில் ஆகியோர் கலந்து கொண்டு கண்காட்சி அரங்கத்தினை பார்வையிட்டனர். இந்நிகழ்ச்சியில் மாநில வேளாண் வளர்ச்சி திட்டத்தில் உயிர்ம வேளாண் உற்பத்தி மையம் அமைப்பதற்கு திருவரங்குளம் வட்டாரம், வடகாடு கிராமத்தை சார்ந்த இயற்கை விவசாயி செ.மனோண்மணிக்கு ரூ.1 லட்சம் மதிப்பிற்கான காசோலை வழங்கினார். இதேபோல், புதுக்கோட்டை, அரிமளம், பொன்னமராவதி மற்றும் திருமயம் வட்டார விவசாயிகளுக்கு மண்புழு உரப்படுக்கை, விசைத்தெளிப்பான், பாரம்பரிய நெல் கருங்குறுவை மற்றும் பழக்கன்றுகளை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் வழங்கினார்.

புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சங்கரலட்சுமி தலைமையேற்று இயற்கை வேளாண்மை முக்கியத்துவம், பாரம்பரிய நெல் இரகங்களின் மருத்துவ குணங்கள் பற்றி எடுத்துரைத்தார். இக்கண்காட்சிக்கு முன்னிலை வகித்து பொ.செல்வி, வேளாண்மை துணை இயக்குநர் (மத்திய அரசு திட்டம்) உயிர்ம வேளாண்மை உற்பத்தியை அதிகரித்து நஞ்சில்லா உணவு அனைவருக்கும் வழங்க வேண்டுமென விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.



உயிர்ம வேளாண் கண்காட்சியில் சகோதர துறைகளான தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை, வேளாண்மை பொறியியல் துறை, விதைச்சான்று மற்றும் உயிர்ம சான்றளிப்புத் துறை, கால்நடை பராமரிப்புத்துறை, உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், இயற்கை வேளாண்மை விவசாய குழுக்கள், இயற்கை வேளாண் இடுபொருள் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் மற்றும் இயற்கை வேளாண் மதிப்புக் கூட்டு பொருட்கள் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் சார்பில் சிறப்பான முறையில் கண்காட்சி அரங்குகள் அமைக்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் வம்பன், வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர், மச்சுவாடி, மண்டல ஆராய்ச்சி மற்றும் கல்வி மையம், தமிழ்நாடு கால்நடை பல்கலைக்கழக பேராசிரியர் மற்றும் தலைவர், தேசிய பயறு வகை ஆராய்ச்சி நிலைய பேராசிரியர்கள், குடுமியான்மலை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய இணைபேராசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டு உயிர்ம வேளாண்மையில் ஊட்டச்சத்து மேலாண்மை, பூச்சி மற்றும் நோய் தாக்குதலை கட்டுப்படுத்தும் முறைகள், பொருளாதாரம் மற்றும் சந்தைப் படுத்துதல், கால்நடைகளுக்கான நோய் தடுப்பு முறைகள் குறித்து விவசாயிகளிடம் கலந்துரையாடினார்கள். மேலும், இயற்கை முன்னோடி விவசாயி சிவராமன், பாரம்பரிய நெல் இரகங்கள், மூலிகை பூச்சி விரட்டி குறித்து தனது அனுபவங்களை விவசாயிகளிடம் பகிர்ந்து கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள அனைத்து வட்டார விவசாயிகளும் கலந்து கொண்டு பயனடைந்தனர். இந்நிகழ்ச்சிக்கானமுன்னேற்பாடுகளை திருவரங்குளம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் க.வெற்றிவேல் செய்திருந்தார். கண்காட்சியின் முடிவில் துணை திட்ட இயக்குநர் – அட்மா ல.முத்துலட்சுமி நன்றியுரை கூறினார்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

## சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# சூழல் கட்டுப்பாட்டுச் சரிகை அலகை பார்வையிட்ட வேளாண் கல்லூரி மாணவர்கள்



ஈரோடு, பிப்.13

வேளாண்மை உதவி இயக்குனர் ஆர்.செந்தில் குமார் தலைமையில் பி.ஜி.பி வேளாண்மை கல்லூரி மாணவர்கள் ஈரோடு மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், சித்தாளந்தூரில் உள்ள தனக்குமரனின் சூழல் கட்டுப்பாட்டுச் சரிகை அலகை பார்வையிட்டனர். இப்பயணத்தின் போது பட்டுப்பூச்சி வளர்ப்பு, மல்பெரி பயிரிடுதல், கூடு உற்பத்தி மற்றும் சுற்றுச்சூழல் கட்டுப்பாட்டு தொழில்நுட்பங்கள் குறித்து நேரடியாக அறிந்தனர்.

வெப்பநிலை மற்றும் ஈரப்பதம் சரியாக பராமரிக்காததால் ஏற்படும் இழப்புகள், நோய் தாக்கம், உயர் முதலீட்டு செலவு, தொழிலாளர் பற்றாக்குறை போன்ற சவால்கள் குறித்து விவசாயி விளக்கமளித்தார். மேலும் தரமான DFL தேர்வு, சுத்தமான வளர்ப்பு கூடம், சரியான நேரத்தில் அறுவடை மற்றும் சந்தைப்படுத்தல் முறைகள் பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது. அரசின் மானியத் திட்டங்கள் மற்றும் உபகரண உதவிகள் தொழிலை நிலைத்திருக்க உதவுவதாக கூறப்பட்டது. இந்த பயணம் சரிகை தொழிலில் உள்ள சவால்களையும் வாய்ப்பு களையும் மாணவர்கள் உணரச் செய்து, சுயதொழில் மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கத்தில் சரிகை முக்கிய பங்காற்றுகிறது என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தியது.



**அன்புடையீர்,**

நமது ‘அக்ரி டாக்டர்’ மின்னிதழ் கடந்த 13 ஆண்டுகளாக மின் நாளிதழ் வடிவில் லட்சக்கணக்கான விவசாயிகள், வேளாண் துறை மாணவர்கள் ஆகியோருக்குத் தேவையான தகவல்களை செய்தி வடிவிலும், கட்டுரை வடிவிலும் வழங்கி வருகிறது. இதனால் பலனடைந்தோர் ஏராளம்.

வேளாண் துறை அதிகாரிகள், வேளாண் துறை வல்லுநர்கள், வேளாண் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மத்திய, மாநில அரசுத் துறை அதிகாரிகள் ஆகியோர் விவசாயிகள், மாணவர்கள் பயனடையும் வகையில், பல்வேறு தகவல்களை செய்தி வடிவிலும் கட்டுரை வடிவிலும் அளித்து வருகின்றனர்.

இத் தருணத்தில், நமது ‘அக்ரி டாக்டர்’ மின்னிதழ், நூல் வடிவில் ஆண்டு மலரை வெளியிட முடிவு செய்துள்ளது. இந்த மலர் விரைவில் வெளியாகவிருக்கிறது. இந்த ஆண்டு மலரில் விவசாயம் தொடர்பான ஏராளமான கட்டுரைகள், விவசாயிகளின் அனுபவங்கள், வெற்றிக் கதைகள், சந்தித்த பிரச்சினைகள் உள்ளிட்டவை இடம்பெறவுள்ளன.





இந்த ஆண்டு மலர் வேளாண் துறை சார்ந்த மாணவர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, இந்த ஆண்டு மலரை வாங்கி பயனடையுமாறு மாணவர்களுக்குப் பரிந்துரை செய்யும்படி தங்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இந்த மலர் ஆயிரக்கணக்கான விவசாயிகளைச் சென்றடையவுள்ளதால், தங்களது கல்லூரி / நிறுவனங்கள் தொடர்பான விளம்பரங்களை இந்த மலரில் அளித்து உதவும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள்
உண்மையுள்ள

ஆசிரியர் & வெளியீட்டாளர்
எம்.ஜெ.வாசுதேவன்

தொடர்புக்கு
+91 80563 05483
+91 9344811812

நன்றி

# எரியோஃபைட் மைட் கட்டுபடுத்தும் முறைகள் குறித்து விழிப்புணர்வு



மதுரை, பிப்.13

மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நான்காம் ஆம் ஆண்டு பயிலும் மாணவி இந்துமதி சி.சே, தனது ஊரக வேளாண் அனுபவத் திட்டத்தின் (RAWE) ஒரு பகுதியாக, தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம், பொட்டல்கலம் கிராமத்தில் அன்று தேங்காய் எரியோஃபிட் மைட் மேலாண்மை குறித்து ஒரு பயிற்சி நிகழ்ச்சியை நடத்தினார். இந்த பயிற்சி நிகழ்ச்சியின் போது, எரியோஃபிட் மைட் தாக்கத்தால் இளம் தேங்காய்களில் முக்கோண வடிவ மஞ்சள் நிறமாதல் மற்றும் தேங்காயில் நீளவாக்கில் பிளவுபடுதல் போன்ற சேத அறிகுறிகள் ஏற்படுகின்றன என்பதை அவர் விளக்கினார்.

மேலும், எரியோஃபிட் மைட்டை கட்டுப்படுத்துவதற்கான வேர் ஊட்டம் (Root feeding) முறையின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். அதோடு, தேங்காய் தோட்டத்தில் சணப்பு (Sun-hemp) பயிரை இடைபயிராக வளர்ப்பதன் மூலம் மைட் தாக்கத்தை குறைக்கலாம் என்பதையும், தேங்காய் தோட்டத்தைச் சுற்றி காசுவரினா மரங்களை எல்லைப்பயிராக வளர்ப்பதன் மூலம் காற்றின் மூலம் எரியோஃபிட் மைட் வயலுக்குள் நுழைவதைத் தடுக்கலாம் என்பதையும் அவர் விளக்கினார். இந்த பயிற்சி நிகழ்ச்சி மூலம், விவசாயிகள் தேங்காய் எரியோஃபிட் மைட் தாக்கத்தின் அறிகுறிகளை சரியான நேரத்தில் அடையாளம் கண்டு, பொருத்தமான மேலாண்மை முறைகளைப் பின்பற்றி சேதத்தை குறைக்க முடியும் என்ற விழிப்புணர்வை மாணவி இந்துமதி.சி.சே ஏற்படுத்தினார்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# உலர் மீன்களின் பல்வேறு பொதியுறை தொழில்நுட்பங்கள் மற்றும் அவற்றின் தர மதிப்பீட்டு பயிற்சி

நாகப்பட்டினம், பிப்.13

நாகப்பட்டினம், சிக்கல், வேளாண்மை அறிவியல் நிலையத்தின் மூலம், உலர் மீன்களின் பல்வேறு பொதியுறை தொழில்நுட்பங்கள் மற்றும் அவற்றின் தர மதிப்பீடு, குறித்த செயல்முறை பயிற்சி 5.2.26 மற்றும் 12.2.26 ஆகிய நாட்களில் நடத்தப்பட்டது. உலர் மீன்களை சேமித்து வைக்கும் பொழுது அவற்றில் ஏற்படக்கூடிய பாதிப்புகளான கலர் மாற்றம், பூச்சி தொற்று, பூஞ்சை தொற்று ஆகியவற்றை போக்கு வதற்கான வெவ்வேறு விதமான பொதியுறை தொழில் நுட்பங்கள் குறித்து விளக்குவதற்காக இந்த பயிற்சியானது ஏற்பாடு செய்யப்பட்டது.



இப்பயிற்சியினை வேளாண்மை அறிவியல் நிலையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் வி.செந்தில்குமார் தொடக்கி வைத்தார். வேளாண்மை அறிவியல் நிலையத்தின் மீன் பதன தொழில்நுட்ப வல்லுநர் முனைவர் ஆ.மதிவாணன் சுகாதார மான முறையில் நெத்திலி, வாளை மீன் மற்றும் சாலை மீன் ஆகியவற்றிலிருந்து கருவாடு மற்றும் மசாலா கருவாடு உற்பத்தி செய்யும் முறை குறித்து விளக்க பயிற்சி அளித்தார்.

மேலும் இப்பயிற்சியில் சாதாரண ஊணஊண (Polyprolene) பொதியுறை முறை, HDPE பொதியுறை முறை மற்றும் வெற்றிட பைகளில் பொதியுறையிடும் தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கப்பட்டு, உற்பத்தி செய்யப்பட்ட உலர் மீன்கள் இம்மூன்று முறைகளிலும் பொதியுறை இடப்பட்டு சேமித்து வைக்கப்பட்டன. பின்பு இந்த மூன்று முறைகளில் எந்த தொழில் நுட்பமானது உலர்மீன்களில் ஏற்படக்கூடிய கலர் மாற்றம், பூச்சி தொற்று மற்றும் பூஞ்சை தொற்று போக்குவதற்கு ஏற்றது என்பது குறித்து ஆராய்ச்சி செய்யப்பட்டு, அவற்றினுடைய ஊட்டச்சத்து குறித்தும் ஆராயப்பட்டு இவற்றில் ஏற்ற முறையானது தொழில் முனை வோர்களுக்கு பரிந்துரை செய்யப்படும்.

இவற்றில் வெற்றிடப் பைகளில் பொதியுறையிடும் முறை யானது மிகவும் ஏற்றதாக இருக்கும். அம்முறையில் உலர் மீன்கள் ஏறக்குறைய ஒரு ஆண்டு காலத்திற்கு எந்த விதமான கலர் மாற்றமும் பூச்சி தொற்றோ, பூஞ்சை தொற்றோ இல்லாமல் வைப்பதற்கு தொழில் முனைவோர்களுக்கு ஏற்றதாக அமையும் என்பதையும் தெளிவாக எடுத்துரைத்தார்.

மேலும் இந்த தொழில்நுட்பங்கள் மூலம் தொழில் முனைவர் ஆவதற்கான மத்திய மற்றும் மாநில அரசு வழங்கக்கூடிய நிதி உதவி திட்டங்கள் குறித்தும் விளக்கப்பட்டது. விழாவின் இறுதியில் நிலையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் பயிற்சியில் கலந்து கொண்ட தொழில் முனைவோருக்கு சான்றிதழ்கள் வழங்கி ஊக்க உரை ஆற்றினார். பயிற்சியில் நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களை சேர்ந்த சுமார் 30 பண்ணை, மீனவ மகளிர் மற்றும் தொழில் முனைவோர் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

# இயற்கை பூச்சி விரட்டி தயாரித்தல் பற்றி அறிந்த வேளாண் கல்லூரி மாணவிகள்



நாமக்கல், பிப்.13

நாமக்கல் மாவட்டம் சேந்த மங்கலம் அடுத்த வேட்டாம் பாடியில் உள்ள பிஜிபி வேளாண்மை கல்லூரி மாணவிகள் முத்துவேல் தோட்டம் அரியாகவுண்டம் பட்டி கிராமத்தில் உள்ள இயற்கை விவசாயி பெ.சரவணனின் தோட்டத்திற்கு சென்று அங்கு இருக்கும் ஒருங்கிணைந்த பண்ணையம், கால்நடை வளர்ப்பு, நாட்டுக் கோழி வளர்ப்பு, பரன்மேல் ஆடு வளர்ப்பு, வெங்காயம் மற்றும் நிலக்கடலை உற்பத்தி,தேனீ வளர்ப்பு, உயிர்வாயு உற்பத்தி போன்றவற்றின் செய்முறைகள் மற்றும் பயன்பாடுகள் பற்றி விரிவாக மாணவிகள் கேட்டு அறிந்து கொண்டனர். மேலும் இயற்கை விவசாயி பெ.சரவணனின் இயற்கை பூச்சி விரட்டி தயாரித்தல், இயற்கை முறையில் எவ்வாறு பயிர்களுக்கு பேரூட்டச்சத்துக்கள் (தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து) நுண்ணூட்டச் சத்துக்கள் அழித்தல் என்பதை விளக்கினார்.

# விவசாயிகள் விதையின் முளைப்புத்திறன் அறிந்து பயன்படுத்த அறிவுரை

திருச்சி, பிப்.13

விவசாயிகள் விதையின் முளைப்புதிறன் அறிந்து பயன்படுத்த வேண்டும் என திருச்சி விதைபரிசோதனை அலுவலர் ஆ.லீமா ரோஸ் அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் விவசாயத்தில் முக்கிய இடுபொருள் விதை. தரமான விதைகளை தேர்வு செய்து விதைக்கும் போது அதிக மகசூல் பெறலாம். அதன் மூலம் வருமானம் அதிகரிக்கும். அதிக முளைப்புத்திறன் உடைய விதைகளை தேர்வு செய்து விதைக்கும் போது பயிர் எண்ணிக்கையை நல்ல முறையில் பராமரிப்பதுடன், அதிக மகசூலையும் பெறலாம்.

திருச்சி விதைபரிசோதனை நிலையத்தில் விதையின் முளைப்புத்திறன், ஈரப்பதம், புறத்தூய்மை மற்றும் பிறரக கலப்பு பரிசோதனைகள் செய்யப்படுகிறது. இவ்விதை பரிசோதனை நிலையத்தில் விதைச்சான்று அலுவலர்கள், விதை ஆய்வாளர்கள், விவசாயிகள், விதை உற்பத்தியாளர்கள் மற்றும் விதை விற்பனையாளர்களிடம் இருந்து பெறப்படும் விதை மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

எனவே விவசாயிகள் விதைப்பதற்கு முன் தாங்கள் சேமித்து வைத்த அல்லது விதை விற்பனையாளர்களிடமிருந்து வாங்கிய விதைகளின் முளைப்புதிறன் அறிந்து பயன்படுத்த வேண்டும். இந்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட விதைகளின் தரப்படி முளைப்புத்திறன் மக்காச்சோளம் 90%, நெல், எள், கொள்ளு 80%, சோளம், கம்பு, ராகி, சிறுதானியங்கள், துவரை, உளுந்து, பாசிபயறு, தட்டை பயிறு, மொச்சை, வீரிய பருத்தி 75%, நிலக்கடலை, சூரியகாந்தி, ஆமணக்கு, கத்தரி, தக்காளி, கீரை வகைகள் 70% பாகற்காய், பீர்க்கு, புடலங்காய், வெள்ளரி, சுரைக்காய், மிளகாய் ஆகியவற்றிற்கு முளைப்புத்திறன் 60% இருக்க வேண்டும்.

விவசாயிகள் மற்றும் விதை விற்பனையாளர்கள் தங்களிடம் உள்ள விதைகளின் முளைப்புத்திறன் அறிய திருச்சிராப்பள்ளி புத்தூர் நால்ரோட்டில் உள்ள ஒருங்கிணைந்த விதைச்

சான்றளிப்பு மற்றும் உயிர்மசான்றளிப்பு கட்டிட வளாகத்திற்குள் செயல்பட்டு வரும் விதைபரிசோதனை நிலையத்தில் விதை பரிசோதனை செய்து கொள்ளலாம்.

விதைபரிசோதனை கட்டணமாக ஒரு விதை மாதிரிக்கு ரூ.80 மட்டும் செலுத்தி விதைகளின் முளைப்புத்திறன் அறிந்து, தரமான விதைகளை பயன்படுத்தி நல்ல மகசூல் பெறலாம் என திருச்சிராப்பள்ளி விதை பரிசோதனை அலுவலர் ஆ.லீமா ரோஸ், வேளாண்மை அலுவலர்கள் ந.சி.அனிதா மற்றும் இரா.புவனேஸ்வரி ஆகியோர் தெரிவித்துள்ளனர்.



# மண்வளத்தை பெருக்கும் மகத்தான ஊட்டமேற்றிய தொழு உரம்



எந்த வகையான பயிராக இருந்தாலும் அது செழித்து வளர மண் வளமே பிரதானம். அப்படிபட்ட மண் இன்று வலுவிழந்த மகசூலை கிள்ளிக் கொடுக்கிறது. தற்போதைய கால கட்டத்தில் கிராமப்புறங்களில் கூட கால்நடைகளின் எண்ணிக்கை படிப் படியாக குறைந்து வருகிறது. ஒரு ஏக்கருக்கு 5 டன் தொழு உரம் இட வேண்டும். நாம் அப்படியா? இடுகிறோம். இருக்கின்ற உரத்தை எளிய முறையில் உயிர் உரங்கள், உயிரியல் கட்டு பாட்டு காரணிகளைப் பயன்படுத்தி குறைந்த செலவில் ஊட்ட மேற்றிய தொழு உரம் எவ்வாறு தயாரிப்பது என்பது பற்றி விரிவாக பார்ப்போம்.

**ஊட்டமேற்றிய தொழு உரம் தயாரிப்பு?**

ஒரு ஏக்கருக்கு தேவையான ஒரு டன் மக்கிய தொழு உரத்தை பயிர் சாகுபடி துவங்குவதற்கு ஒரு மாத காலத்திற்கு முன் நிலத்திலேயே தயாரிக்கலாம். ஒரு டன் மக்கிய தொழு உரத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். இதனுடன் பயிர் வளர்ச்சியை ஊக்குவிக்கும் மண்ணில் வாழும் வேர் முடிச்சு பாக்டீரியாவான பேசில்லஸ் சப்சிடிஸ், உயிர் பூஞ்சானங்களான டி.விரிடி, வெர்டிசிலியம் லக்கானி, மெட்டாரைசியம் லக்கானி, போன்றவற்றை தலா ஒரு கிலோ எடுத்துக் கொள்ள வேண்டும்.

உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம், ரைசோபியம், பாஸ்போ பாக்டிரியா தலா ஒரு கிலோ எடுத்து அனைத்தையும் கலந்து நிழலான இடத்தில் படுக்கை போல அமைத்து அதன் மேல் வைக்கோல் கொண்டு மூட வேண்டும்.

இவ்வாறு பெறப்பட்ட ஊட்டமேற்றிய தொழு உரத்தை பயன்படுத்துவதன் மூலமாக மண்ணில் சத்தின் அளவை அதிகரிக்க உதவு கின்றன. மண்ணில் உள்ள பேரூட்ட மற்றும் நுண்ணூட்ட சத்துகள் பயிர்களுக்கு எளிதில் கிடைக்க வழிவகை செய்கிறது.

**ஊட்டமேற்றிய தொழு உரம் இடுவதால் ஏற்படும் பயன்கள்?**

1) பயிர்களின் வேர் வளர்ச்சி அதிகமாகி மண்ணில் உள்ள நுண்ணுயிரிகளைப் பெருக்கி பிற சத்துகள் பயிர்களுக்கு கிடைக்க செய்கிறது.

2) பல வகையான உயிரியல் கட்டுபாட்டு காரணிகளை தொழு உரத்துடன் கலந்து விடுவதன் மூலமாக மண் மூலம் பரவும் பூச்சி/ நோய் பயிர்களைத் தாக்குவதை குறைக்கலாம்.

3) மண்ணில் நுண்ணுயிர் பெருக்கம் அதிகரிக்கப்படுகிறது.

4) நீர் பிடிப்பு தன்மை மண்ணில் ஏற்படும்.

5) அங்கக கரிம சத்துகளின் விகிதம் (C.N RATIO) அதிகரிக்க உதவும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# விரிவாக்க சீரமைப்பு திட்டம் – விவசாய நடைமுறைகள் குறித்த பண்ணைப்பள்ளி பயிற்சி



சிவகங்கை, பிப்.13

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டாரத்தில் வேளாண்மை துறை – அட்மா விரிவாக்க சீரமைப்பு திட்டத்தின் கீழ் விவசாய நடை முறைகள் குறித்த பண்ணைப்பள்ளி குறித்த விவசாயிகள் பயிற்சி தூதை கிராமத்தில் 12.02.26 அன்று நடைபெற்றது. வேளாண்மை உதவி இயக்குநர் தா.மலர்விழி, வேளாண்மை துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்தும் நெல்பயிருக்கு நெல் நுண்ணூட்டத்தின் பயன்பாடுகள், வேளாண் திட்டங்கள் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார். உதவி வேளாண்மை அலுவலர் க.கரும்பு செல்வம் நுண்ணீர் பாசன பயன்பாடுகள் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார். வேளாண்மை அலுவலர் (ஓய்வு) குணசேகரன், நெல் பயிரின் பூச்சி மற்றும் நோய் கட்டுப்பாடு பற்றி விரிவாக எடுத்துரைத்தார். உதவி வேளாண்மை அலுவலர் க.கரும்புசெல்வம் நுண்ணீர் பாசன பயன்பாடுகள் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார். உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் நந்தினி மற்றும் சண்முக பிரியா பயிற்சிக்கான ஏற்பாடுகளை செய்து செயல்விளக்கம் செய்து காண் பித்தனர். தூதை கிராம விவசாயிகள் 25 பேர் கலந்து கொண்டனர்.

# விவசாயிகள் ஆலோசனை குழு கூட்டம் நடந்தது




சேலம், பிப்.13

சேலம் மாவட்டம், ஏற்காட்டில் வட்டார அளவிலான விவசாயிகள் குழு கூட்டம் நடைபெற்றது. வேளாண் விரிவாக்க உறுதுணை சீரமைப்பு திட்டத்தின் கீழ் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை மூலம் வரும் நிதியாண்டிற்கு வரவிருக்கும் திட்டங்கள், செயல் விளக்கங்கள், உள் மாவட்ட அளவிலான பயிற்சிகள், கிராம வேளாண்மை முன்னேற்ற குழுக்கள், விவசாயிகள் விஞ்ஞானிகள் கலந்துரை யாடல், கிசான் கோஷ்டி போன்ற திட்டங்கள் செயல்படுத்த பட இருக்கிறது.

இதில் ஆத்மா சேர்மன் தங்கசாமி, தோட்டக்கலைத்துறை, பட்டு வளர்ச்சி துறை, வனத்துறை, மீன்வளத்துறை ஆகிய துறை களின் சார்பாக அலுவலர்கள் கலந்து கொண்டு செயல் படுத்தப் குபடும் திட்டங்கள் மற்றும் மானியங்களை வட்டார விவசாயி களுக்கு எடுத்துரைத்தனர்.

மேலும், வேளாண்மை உதவி இயக்குனர் ஷிரீன் விவசாய அடையாள எண் பற்றியும் துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள், மானியங்கள், விதை இருப்புகள் விதை பண்ணை ஆகியவற்றை எடுத்துரைத்தார். துணை வேளாண்மை அலுவலர் ரவி மண் மாதிரி, உயிரி உரங்களின் முக்கியத்துவம் பற்றியும் எடுத்துரைத்தார்.

ஆத்மா அலுவலர்கள், வட்டார தொழில்நுட்ப மேலாளர் க.மு.ஷோபனா, உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் துரையரசு, அருண்குமார் ஆகியோர் தகுந்த ஏற்பாடுகளை செய்து இருந்தனர்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# FPO - ஆர்கானிக் மிளகாய் சாகுபடி கள ஆய்வு



விருதுநகர், பிப்.12

விருதுநகர் பாரம்பரிய பயிர் உற்பத்தியாளர் நிறுவனம் பரளச்சி சார்பில் நபார்டு மற்றும் சிசிடி தொண்டு நிறுவனம் மற்றும் (MABIF) இணைந்து இந்த ஆண்டு 25-26யில் புவிசார் குறியீடு பெற்ற சம்பா மிளகாய் வத்தல் பயிரை அங்கக முறையில் (ORGANIC) 200 ஏக்கர் பரப்பளவில் ஆலடிபட்டி, இராஜகோபாலபுரம், கீழ்குடி, தொப்பலாக்கரை, புல்லாநாயக்கன் பட்டியில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

தற்போது பூவும் காயாக இருக்கிறது. இதனை சிசிடி திட்ட இயக்குநர் ஜான் பிரிட்டோ, சிசிடி மூலிகை மற்றும் மார்கெட்டிங் கள அலுவலர் சுரேஷ் செயல் அலுவலர்கள் பார்த்த சாரதி, சுந்தர மகாலிங்கம், அருண், வேளாண் ஆலோசகர் சந்திர சேகரன் உட்பட பலர் கள ஆய்வு செய்தனர்.

திட்ட இயக்குநர் ஜான் பிரிட்டோ கூறுகையில், நஞ்சில்லா மிளகாய் சாகுபடி செய்ய இயற்கை வழி வேளாண்மையை முன்மாதிரியாக இங்கு பயிரிடப்பட்டுள்ளது. ஒரு காலத்தில் இந்த பகுதியில் அதிகமாக பயிரிடப்பட்ட மிளகாய் குறைந்து விட்ட நிலையில் மிளகாய் சாகுபடி அதிகரிக்க (VTCPCL FPO) உதவுகின்றன என்றார். மார்கெட்டிங் அலுவலர் சுரேஷ் பேசுகையில், நல்ல தரமான ரசாயன எச்சமின்றி பயிரிடப்பட்ட மிளகாய் வத்தல் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி வாய்ப்புள்ளதாக தெரிவித்தார்.

செயல் அலுவலர் பார்த்த சாரதி கூறுகையில், நபார்டு மற்றும் FPO VTPCL, MABIF இணைந்து இங்கு மிளகாய் சாகுபடியை முழுக்க முழுக்க இயற்கை முறையில் செய்யப்பட்டு கள அலுவலர்களின் மூலமாக உரிய பதிவுகளை (APP) பதிவேற்றம் செய்து வருவதாக தெரிவித்தார்.

அக்ரி ஆலோசகர் சந்திர சேகரன் கூறுகையில், மிளகாயில் காய்புழுக்களை கட்டுப்படுத்த, பேவரியா பேசியானா மருந்தை 10 லிட்டர் தண்ணீருக்கு 30 மிலி கலந்து தெளிக்கலாம். இனக்கவர்ச்சி பொறி (PHEROMONES TROPS ஏக்கருக்கு 5 எண்ணம் வைத்து ஆண் அந்து பூச்சிகளை கவர்ந்து அழிக்கலாம். NPV வைரஸ் கரைசலை மாலை நேரங்களில் தெளிக்கலாம். பாதிக்கப்பட்ட காய் களை உடனடியாக அப்புறப் படுத்த வேண்டும் என்றார். இவ்வாறாக ஒருங்கிணைந்த முறை யில் காய்புழுக்களை கட்டுப்படுத்தலாம். இதனை ஆர்கானிக் முறையில் சாகுபடி செய்யும் விவசாயிகள் பின்பற்ற வேண்டும் என்றார். நச்சுத்தீனி (POISON BAIT) தயாரிக்கும் முறை எடுத்துக்கூறி மாலை நேரங்களில் இதனை பயன்படுத்த வேண்டும் என்றார்.

இந்த நிகழ்வில் முன்னோடி விவசாயிகள் சந்திரன், சுப்புராஜ், குரு சாமி மற்றும் பூமிநாதன், சுதா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## மண் மாதிரிகள் எடுக்கப்படும் முறை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திய வேளாண் மாணவர்கள்



நாமக்கல், பிப்.13

பிஜிபி வேளாண்மை அறிவியல் கல்லூரி மாணவர்கள் கிராமப்புற அனுபவ பயிற்சியின் கீழ் நாமக்கல் மாவட்டம், எருமப்பட்டி வட்டாரம், தேவராயபுரம் கிராமத் தில் விவசாயிகளுக்கு செயல் விளக்கம் மூலம் மண் மாதிரிகள் எடுக்கப்படும் முறை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

மண் மாதிரிகள் எடுக்கப்படும் முறை சரியாக இருந்தால் மட்டுமே மண் பரிசோதனை அறிக்கை துல்லியமாக இருக்கும். எனவே அறிவியல் முறையில், கவனமாக மண் மாதிரிகளை எடுக்க வேண்டும். முதலில் வயல் அல்லது தோட்டத்தை மண் தன்மை, பயிர் வரலாறு, பாசன முறை ஆகியவற்றின் அடிப்படையில் ஒரே மாதிரியான பகுதிகளாக பிரிக்க வேண்டும். அதிகம் உரம் போட்ட இடங்கள், வாய்க்கால் ஓரங்கள், மரங்கள் அருகிலுள்ள இடங்கள், குப்பை கொட்டிய பகுதிகள் போன்றவற்றை தவிர்க்க வேண்டும். பின்னர் ஒவ்வொரு பகுதியில் 10 முதல் 15 இடங்களில் 'V' அல்லது 'W' வடிவில் மண் எடுக்க வேண்டும். மண் எடுப்பதற்கு முன் மேற் பரப்பில் உள்ள புல், இலை, கற்கள், கழிவுகளை அகற்ற வேண்டும்.

வறட்சி மற்றும் பாசன பயிர்களுக்கு 0-15 செ.மீ ஆழத்தில், தோட்டப் பயிர்களுக்கு 0-30 செ.மீ ஆழத்தில் மண் எடுக்க வேண்டும். மண் குத்தி (Soil auger) அல்லது கரண்டி பயன்படுத்தி எடுத்த மண்ணை சுத்தமான பிளாஸ்டிக் தாளில் சேகரிக்க வேண்டும். சேகரித்த மண்ணை நன்றாக கலந்து, கற்கள் மற்றும் பெரிய குச்சிகளை அகற்றி, அதிலிருந்து சுமார் 500 கிராம் மண்ணை பிரதிநிதி மாதிரியாக எடுக்க வேண்டும். எடுத்த மண் மாதிரியை நேரடி வெயிலில் உலர்த்தக்கூடாது; நிழலில் உலர்த்தி, சுத்தமான துணிப்பை அல்லது பிளாஸ்டிக் பையில் போட வேண்டும். பையில் விவசாயியின் பெயர், வயல் எண், கிராமம், பயிர் பெயர், பரப்பளவு போன்ற விவரங்களை தெளிவாக எழுத வேண்டும். இவ்வாறு சரியான முறையில் மண் மாதிரிகள் எடுத்து ஆய்வகத்திற்கு அனுப்பினால், மண் பரிசோதனை அறிக்கை துல்லியமாக கிடைத்து, சரியான உர மேலாண்மை மற்றும் அதிக விளைச்சல் பெற முடியும்.

## பட்டு புழு வளர்ப்பு குறித்து வேளாண் மாணவர்கள் கலந்துரையாடல்

நாமக்கல், பிப்.13

நாமக்கல் மாவட்டம், பிஜிபி வேளாண் கல்லூரியில் பயிலும் இறுதியாண்டு மாணவர்கள், தங்களது கிராமப்புற அனுபவ பயிற்சி (RAWE) திட்டத்தின் ஒரு பகுதியாக எலச்சிப்பாளையம் பகுதியில் உள்ள விவசாயி வினோத் குமார், சந்தித்து பட்டு புழு வளர்ப்பு குறித்து கலந்துரையாடினர். இந்நிகழ்வின் போது, பட்டு புழு வளர்ப்பின் அடிப்படை நடைமுறைகள் மற்றும் அதன் பொருளாதார முக்கியத்துவம் குறித்து மாணவர்கள் அறிந்து கொண்டனர்.

விவசாயி வினோத் குமார், தாம் மேற்கொண்டு வரும் பட்டு புழு வளர்ப்பு முறைகள், குறிப்பாக மல்பெர்ரி இலைத் தேர்வு, வளர்ப்பு அறை பராமரிப்பு, வெப்பநிலை மற்றும் ஈரப்பத கட்டுப்பாடு போன்ற தொழில்நுட்ப அம்சங்களை விளக்கமாக எடுத்துரைத்தார். மேலும், ஆரோக்கியமான புழுக்களை உருவாக்க சுத்தமான சூழல் மற்றும் முறையான உணவளிப்பு அவசியம் என்பதை வலியுறுத்தினார்.

அதேபோல், பட்டு புழுக்களில் ஏற்படும் நோய்கள், அவற்றை தடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் ஒருங்கிணைந்த நோய் மேலாண்மை முறைகள் குறித்து விரிவாக பகிர்ந்து கொண்டார். தயாராகும் கூண்டுகளை (cocoons) தரம் உயர்த்தி சந்தைப்படுத்தும் வழிமுறைகள் மற்றும் அரசு வழங்கும் உதவித் திட்டங்கள் பற்றியும் மாணவர்கள் கேட்டறிந்தனர்.



இத்தகைய நேரடி கள அனுபவம், மாணவர்களின் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்துவதோடு, விவசாயத் தொழிலின் நடைமுறை சவால்களை புரிந்துகொள்ள உதவுகிறது. மேலும், விவசாயி களுடன் இணைந்து செயல்படும் மனப்பாங்கை வளர்க்கும் இவ்வகை பயிற்சிகள், எதிர்காலத்தில் திறமையான வேளாண் நிபுணர்களாக உருவாக மாணவர்களுக்கு உறுதுணையாக அமைகின்றன.




# தென்னை மரங்களில் காண்டாமிருக வண்டுகளை கட்டுப்படுத்த வாளி வலை முறை செயல் விளக்கமளித்த வேளாண்மை கல்லூரி மாணவர்!



மதுரை, பிப்.13

மதுரை மாவட்டம், கொட்டாம்பட்டி அருகே உள்ள சொக்கலிங்கபுரம் கிராமத்தில், மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் இறுதி ஆண்டு பயிலும் மாணவர் செ.ஞானசூரியன், ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் கீழ் அங்குள்ள விவசாயிகளுக்கு தென்னை மரங்களைத் தாக்கும் காண்டாமிருக வண்டுகளை (Rhinoceros beetle) கட்டுப்படுத்தும் அறிவியல் முறைகள் குறித்து வயல் விளக்கக் காட்சி நடத்தினார்.

தென்னை மரங்களில் குருத்துகளை சேதப்படுத்தி, வளர்ச்சி யையும் விளைச்சலையும் பாதிக்கும் காண்டாமிருக வண்டுகளை கட்டுப்படுத்த வாளி வலை முறை (Bucket Trap) ஒரு சிறந்த மற்றும் சுற்றுச்சூழல் நட்பு முறையாகும் என்பதை மாணவர் விளக்கினார்.

**அமைக்கும் முறை : (Methodology)**

முதலில் 10-15 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு பிளாஸ்டிக் வாளியை எடுத்துக் கொண்டு, அதன் மூடியின் கீழ்புறத்தில் 3 முதல் 4 செவ்வக வடிவ துளைகள் (ஜன்னல்கள் போன்றவை) இடப்பட வேண்டும்.

வண்டுகள் எளிதாக வாளிக்குள் செல்ல அதன் வெளிப்புறத்தில் சணல் சாக்கு அல்லது நாரினை சுற்றிக் கட்ட வேண்டும். இது வண்டுகள் வழுக்காமல் ஏற உதவும். பின்னர், 'ரைனோலூர்' (Rhinolure) எனப்படும் இனக்கவர்ச்சி மாத்திரையை மெல்லிய கம்பி மூலம் வாளியின் மூடியின் உட்புறம் தொங்கவிட வேண்டும். அந்த மாத்திரை தண்ணீரில் படாதவாறு கவனிக்க வேண்டும்.

வாளியின் கால் பகுதி வரை தண்ணீர் நிரப்பி, அதில் சிறிதளவு சோப்புத் தூள் அல்லது பூச்சிக்கொல்லி மருந்து சேர்த்து கலக்க வேண்டும். இதனால் உள்ளே விழும் வண்டுகள் மூச்சுத்திணறி அழிகின்றன. இந்தப் பொறியை தென்னை மரத்தில் நேரடியாக கட்டாமல், 1.2 முதல் 1.8 மீட்டர் (4-6 அடி) உயரமுள்ள கம்பில் கட்டி தோப்பில் ஆங்காங்கே அமைக்க வேண்டும்.

பராமரிப்பாக வாரம் ஒரு முறை வாளியைச் சோதித்து, இறந்த வண்டுகளை அகற்றி தண்ணீரை மாற்ற வேண்டும். இனக்கவர்ச்சி மாத்திரையை 3-4 மாதங்களுக்கு ஒரு முறை மாற்ற வேண்டும்.

**நன்மைகள் (Benefits)**

இந்த வாளி வலை முறை ஆண் மற்றும் பெண் வண்டுகள் இரண்டையும் கவரக்கூடியது. குறிப்பாக முட்டையிடும் நிலையில் உள்ள பெண் வண்டுகளை அழிப்பதன் மூலம் அவற்றின் பெருக்கம் கட்டுப்படுத்தப்படுகிறது. தென்னை குருத்துகள் சேத மடைவது தடுக்கப்படுவதால், காய்ப்பின் அளவு சுமார் 20% வரை அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது. இது நச்சுத்தன்மையற்ற மற்றும் சுற்றுச்சூழல் நட்பு முறை என்பதால், நன்மை செய்யும் பூச்சிகள் பாதிக்கப்படாது. இயற்கை வேளாண்மைக்கும் இது ஏற்றதாகும்.

மேலும், விலையுயர்ந்த ரசாயன மருந்துகளைத் தெளிப்பதைவிட குறைந்த செலவில் நீண்டகால பலனை அளிக்கும் முறையாகும். தோப்பில் வண்டுகளின் நடமாட்டத்தை கண்காணிக்கவும் இந்தப் பொறி உதவுகிறது. அதன் மூலம் சரியான நேரத்தில் தேவையான மேலாண்மை நடவடிக்கைகளை எடுக்கலாம் என்பதும் விவசாயி களுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியின் முடிவில், காண்டாமிருக வண்டுகளை கட்டுப் படுத்தும் முறைகள் குறித்து விளக்கமளிக்கப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. இந்த செயல் விளக்கக் காட்சியின் மூலம், தென்னை பயிரில் பூச்சி மேலாண் மைக்கான அறிவியல் முறைகளைப் பயன்படுத்துவதன் முக்கியத் துவம் விவசாயிகளுக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

இதுபோன்ற தொழில்நுட்ப வழிகாட்டல்கள் தொடர்ந்து வழங்கப் படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**



# தென்னை மரங்களில் ஏற்படும் ஸ்டெம் ப்ளீடிங் நோயை கட்டுப்படுத்தும் முறையை விளக்கிய வேளாண் கல்லூரி மாணவி



நாமக்கல், பிப்.13

நாமக்கல் மாவட்டம், சேந்த மங்கலம் வட்டம், துத்திக்குளம் கிராமத்தில் நாமக்கல் வேளாண்மை அறிவியல் கல்லூரி மாணவி தக்ஷினி ஊரக வேளாண் பணி அனுபவ திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கு தென்னை மரங்களில் ஏற்படும் ஸ்டெம் ப்ளீடிங் (stem bleeding) நோயை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து பயிற்சி மட்டும் செய்முறை விளக்கக் காட்சி நடத்தினர்.

இந்த பயிற்சியில் தென்னை மரத்தின் தண்டு பகுதியில் ஸ்டெம் பீளீடிங் நோயை கட்டுப்படுத்த டிரைக்கோடெர்மா விரிடி (200g), வேப்ப புண்ணாக்கு (5kg), தொழு உரம் (50kg) ஆகிய மூன்றையும் கலந்து வருடத்திற்கு ஒரு முறை ஒரு மரத்திற்கு தெளிப்பதன் மூலம் நோய் ஏற்படுத்தும் பூஞ்சை கிருமிகளை தடுக்க முடியும் என்பதும் தண்டு பகுதியில் அதிக ஈரப்பதத்தை குறைப்பதன் மூலம் ஸ்டெம் ப்ளீடிங் நோயில் தாக்கம் குறிப்பிடத் தக்க அளவில் குறைகிறது என்றும் விளக்கப்பட்டது. மேலும் சுண்ணாம்பு கறைசளை பூசுவதன் மூலமாகவும் நோயை கட்டுப்படுத்த முடியும் என்றும் கவனிக்க வேண்டிய முன்னெச் சரிக்கை நடவடிக்கைகள் குறித்து விவசாயிகளுக்கு எளிமை யான முறையில் செய்முறை விளக்கமாக காட்டப்பட்டது. இந்த முறையை விவசாயிகள் முறையாக பின்பற்றுவதன் மூலம் தென்னையை நோய்களிலிருந்து பாதுகாத்தும் அவர்கள் ஆரோக்கியத்தை மேம்படுத்தி மகசூல் இழப்பதை தவிர்க்க முடியும் என தெரிவிக்கப்பட்டது. இந்த பயிற்சி நிகழ்ச்சி தென்னை சாகுபடி நோய் மேலாண்மையை மேம்படுத்தும் வகையில் பயனுள்ளதாக அமைந்தது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**


Rithvik Pipe
25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்
பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்
25 ஆண்டுகள் உத்தரவாதம்
நம்பிக்கைக்கு அடையாளம்
100% LEAD-FREE பைப்புகள்
ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
ISI சான்று பெற்ற பைப்புகள்
தரத்திற்க்கு ஒரே அடையாளம்
ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
67 GRADE மூலப்பொருட்கள்
அதிக வலிமை, நீண்ட ஆயுள்
TEST CERTIFICATE – QR CODE மூலமாக
ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
FREE ON-SITE TESTING
விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
சரியான எடை, தடிமன்
ஏமாற்றமில்லா தயாரிப்பு
PRODUCT RANGES
ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes)
ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80)
ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy)
ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG)
ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm
PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK
RITHVIK PIPES PROUDLY TRUSTED BY
LMW
isha
Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com
POWERGRID
BHEL
Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com
For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# மண் ஆரோக்கிய அட்டை திட்டம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்திய வேளாண் கல்லூரி மாணவர்கள்



நாமக்கல், பிப்.13

பி.ஜி.பி வேளாண்மை அறிவியல் கல்லூரி மாணவர்கள், விவசாயிகளுக்கு மண்ணின் ஆரோக்கியத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் நோக்கில் மண் ஆரோக்கிய அட்டை (Soil Health Card - SHC) திட்டம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

இந்த திட்டம் இந்திய அரசால் 19 பிப்ரவரி 2015 அன்று அறிமுகப் படுத்தப்பட்டது. ஒவ்வொரு விவசாயிக்கும் தங்கள் நிலத்தின் ஊட்டச்சத்து நிலையை அறிவியல் முறையில் எளிமையாக புரிந்து கொள்ள உதவும் அறிக்கையை வழங்குவதே இதன் பிரதான நோக்கம். மாணவர்கள், ராபி மற்றும் காரீப் பருவ அறுவடைக்கு பிறகு ஆண்டுக்கு இருமுறை மண் மாதிரிகள் எவ்வாறு சேகரிக் கப்பட வேண்டும், ஆய்வகத்தில் அவை எவ்வாறு பரிசோதிக்கப் படுகின்றன என்பதைக் குறித்து விரிவாக விளக்கினர். மண் ஆரோக்கிய அட்டையில் குறிப்பிடப்படும் 12 முக்கிய அளவு கோல்கள் பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது. அவை பெருஊட்டச் சத்துக்கள் – நைட்ரஜன் (N), பாஸ்பரஸ் (P), பொட்டாசியம் (K), சல்பர் (S), நுண்ணூட்டச்சத்துக்கள் – துத்தநாகம் (Zn), இரும்பு (Fe), செம்பு (Cu), மாங்கனீஸ் (Mn), போரான் (B), மேலும் மண் அமிலத்தன்மை (pH), மின்கடத்துத்திறன் மற்றும் உயிர்க்கார்பன் ஆகியவையாகும். இந்த மதிப்புகளின் அடிப்படையில், எந்த வகை உரங்களை எவ்வளவு அளவில் பயன்படுத்த வேண்டும், உயிரி உரங்கள் மற்றும் மண் திருத்திகள் எவை தேவையென பரிந்துரைகள் வழங் கப்படுகின்றன. இதன் மூலம் தேவையற்ற இரசாயன உரங்களின் பயன்பாடு குறைந்து, செலவுகள் மிச்சமாகி, மகசூல் அதிகரித்து, நீண்ட கால மண் வளம் பாதுகாக்கப்படும் என்பதை மாணவர்கள் வலியுறுத்தினர். விவசாயிகள் தங்கள் நிலத்திற்கு மண் பரிசோதனை அவசியம் செய்து, மண் ஆரோக்கிய அட்டையைப் பயன்படுத்தி சமநிலை யான உர மேலாண்மையை கடைப்பிடிக்க வேண்டும் என்றும், இது நிலைத்திருக்கும் வேளாண்மைக்கான முக்கியமான படியாகும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

அட்டையில் உள்ள இவ்விவரங்களை வைத்து நிலத்திற்கு ஏற்ற உரத் திட்டம் தயாரிக்கலாம். அதிகமாகவோ குறைவாகவோ உரம் இடுவது பயிர் வளர்ச்சிக்கும், மண் வளத்திற்கும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதையும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

மண் ஆரோக்கிய அட்டை மூலம் சமநிலையான உரமிடல் நடைமுறைப்படுத்தப்படுவதால், செலவு குறைவு, மகசூல் உயர்வு, தரமான விளைபொருள், மண் நுண்ணுயிர்கள் பாதுகாப்பு, நீண்ட கால நில வளம் மேம்பாடு போன்ற பல நன்மைகள் கிடைக்கின்றன. மேலும், உயிரி உரங்கள், பசளைகள், சுண்ணாம்பு போன்ற மண் திருத்திகளை தேவைக்கு ஏற்ப பயன்படுத்த வழிகாட்டுதலும் அட்டையில் வழங்கப்படுகிறது.

விவசாயிகள் பலர் ஒரே மாதிரியான உர அட்டவணையை பின்பற்றுவதை விட, தங்கள் நிலத்தின் பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் உரம் பயன்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தை உருவாக்குவதே இந்த திட்டத்தின் வெற்றியாகும் என்று மாணவர்கள் தெரிவித்தனர். மண் பரிசோதனை செய்தால் மட்டும் தான், மண்ணை அறிந்து விவசாயம், செய்வது சாத்தியம் எனவும் வலியுறுத்தினர்.

# வாழையில் இடைநடவு குறித்த பயிற்சி நிகழ்ச்சி



தேனி, பிப்.13

தேனி மாவட்டம், சின்னமனூர் வட்டாரத்திற்குட்பட்ட கன்னிசேர்வைப்பாட்டி கிராமத்தில், வாழை பயிரில் இடைநடவு செய்வது குறித்த பயிற்சி நிகழ்ச்சி அன் ரிட்டாவால் நடத்தப்பட்டது. இந்த பயிற்சி நிகழ்ச்சியின் நோக்கம், வாழை தோட்டங்களில் இடைநடவு மேற்கொள்வதன் பயன்கள் மற்றும் தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு எடுத்துரைத்து, உற்பத்தி மற்றும் வருமானத்தை அதிகரிப்பதாகும். நிகழ்ச்சியின் போது, ஏற்ற இடைபயிர்கள் தேர்வு, பயிர் மேலாண்மை முறைகள், மண் வள மேம்பாடு மற்றும் கிடைக்கக்கூடிய வளங்களை திறமையாக பயன்படுத்துவது குறித்து நடைமுறை வழிகாட்டுதல் வழங்கப்பட்டது.

கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள் பயிற்சி நிகழ்ச்சியில் ஆர்வமுடன் கலந்து கொண்டு, பயிர் தேர்வு மற்றும் சாகுபடி முறைகள் தொடர்பாக வளநபருடன் கலந்துரையாடி தங்கள் சந்தேகங்களை தெளிவுபடுத்திக் கொண்டனர்.

இந்த பயிற்சி, நிலைத்த வேளாண் நடைமுறைகளை வலியுறுத்தி, பல்வேறு பயிர் முறைகளை விவசாயிகள் கடைபிடிக்க ஊக்குவித்தது. இந்த பயிற்சி நிகழ்ச்சி விவசாயிகளிடையே நல்ல வரவேற்பைப் பெற்றதுடன், இப்பகுதியில் வாழை சாகுபடியில் மேம்பட்ட நடைமுறைகளும் சிறந்த பொருளாதார வருவாயும் கிடைக்க உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.



# தென்னையில் வெள்ளை ஈ தாக்குதலை கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த மேலாண்மை குறித்த செயல் விளக்கப் பயிற்சி



ஈரோடு, பிப்.13

ஈரோடு மாவட்டம், பொங்கலூர் வட்டாரம், மாதப்பூர் கிராமத்தில், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் இறுதி ஆண்டு மாணவர்கள், ஊரக வேளாண்மை பணி அனுபவத் திட்டம் (யூபுநிசி) கீழ் தங்கியிருந்து கிராமங்களுக்கு நேரடியாக சென்று விவசாயிகளை சந்தித்து வருகின்றனர். இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாக, விவசாயிகளின் நிலைமைகள், சவால்கள் மற்றும் அனுபவங்களை நேரில் அறிந்து கொண்டு, அதற்கேற்ற அறிவியல் அடிப்படையிலான வேளாண்மை தொழில்நுட்பங்களை அவர்களிடம் கொண்டுசேர்த்து வருகின்றனர்.

அதன் ஒரு பகுதியாக, மாதப்பூர் கிராமத்தில் தென்னையில் ஏற்படும் வெள்ளை ஈ தாக்குதலை கட்டுப்படுத்துவதற்கான ஒருங்கிணைந்த மேலாண்மை வழிமுறைகள் குறித்து சிறப்பான செயல் விளக்கப் பயிற்சி நடைபெற்றது. இந்த பயிற்சியில், வெள்ளை ஈ தாக்குதலால் தென்னை மரங்களில் ஏற்படும் இலை மஞ்சளாக்கம், சாறு உறிஞ்சுதல், வளர்ச்சி பாதிப்பு மற்றும் விளைச்சல் இழப்பு போன்ற பாதிப்புகள் குறித்து மாணவர்கள் விளக்கினர்.

மேலும், இரசாயன பூச்சிக்கொல்லிகளை அதிகமாக பயன் படுத்தாமல், இயற்கை முறையிலும் குறைந்த செலவிலும் வெள்ளை ஈக்களை கட்டுப்படுத்தக்கூடிய நடைமுறை வழிமுறைகள் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது. அதன் ஒரு பகுதியாக, மஞ்சள் ஒட்டுப்பொறிகளை தென்னையில் சரியான இடைவெளியில் கட்டுதல், கிரைசோபெர்லா போன்ற பயனுள்ள இரைவிழுங்கிகளை ஊக்குவித்தல், மைதா மாவு கரைசலைத் தயாரித்து தெளித்தல் போன்ற செயல் விளக்கங்கள் நேரடியாக செய்து காட்டப்பட்டன. இந்த ஒருங்கிணைந்த மேலாண்மை முறைகளை பின்பற்றுவதன் மூலம், சுற்றுச்சூழல் பாதிப்பை குறைத்து, இயற்கை சமநிலையை பாதுகாத்தபடி,

தென்னையில் வெள்ளை ஈ தாக்குதலை திறம்பட கட்டுப்படுத்த முடியும் என்பதை மாணவர்கள் விளக்கமாக எடுத்துரைத்தனர்.

இந்த செயல் விளக்கப் பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகள், அதிக ஆர்வத்துடன் பயிற்சியை கவனித்து, தங்கள் வயல்களில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் சந்தேகங்களை முன்வைத்து விளக்கம் பெற்றனர். மாணவர்களின் நடைமுறை விளக்கங்கள் விவசாயிகளிடையே நல்ல வரவேற்பை பெற்றதுடன், இந்த முறைகளை தங்கள் வயல்களில் செயல்படுத்துவதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

# வாழைச் செடிகளில் "Paring மற்றும் Pralinage" முறைகள் குறித்த விளக்கக் காட்சி நடைபெற்றது



சிவகங்கை, பிப்.13

சிவகங்கை மாவட்டம், எஸ்.புதூர் ஒன்றியத்தின் கீழ் உள்ள கிழ வயல் கிராமத்தில் 6.2.26 அன்று வாழைச் செடிகளில் "Paring மற்றும் Pralinage" முறைகள் குறித்த விளக்கக் காட்சி (Demonstration) சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சி விவசாயிகளின் விளைச்சல் உயர்வு மற்றும் நோயற்ற நாற்று உற்பத்தியை நோக்கமாகக் கொண்டு ஏற்பாடு செய்யப்பட்டது. வாழை நாற்று நடவு செய்யும் முன் அவற்றின் வேர் பகுதியை சுத்தப்படுத்தும் Paring முறை மற்றும் பூச்சி, நோய் தாக்கங்களைத் தடுக்க வேர் பகுதியை மருந்து கலவையில் மூழ்கடிக்கும் Pralinage முறை ஆகியவை செயல் முறை விளக்கத்துடன் எடுத்துரைக்கப்பட்டன.

Paring முறையின் மூலம் பழைய, பாதிக்கப்பட்ட வேர் பகுதிகள் அகற்றப்பட்டு, ஆரோக்கியமான வளர்ச்சிக்கான சூழல் உருவாக்கப் படுகிறது. Pralinage முறையில் பரிந்துரைக்கப்பட்ட மருந்து கலவையில் நாற்று வேர்கள் நன்கு மூழ்கடிக்கப்பட்டு, மண் மூலம் பரவும் பூஞ்சை மற்றும் பூச்சி தாக்கங்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன. இந்த விளக்க நிகழ்வில் வேளாண்மை மாணவர்கள் நேரடி களத்தில் செய்முறை காட்டினர். மேலும், வாழை சாகுபடியில் தொடக்க நிலையில் மேற்கொள்ளப்படும் இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

மூலம் செலவு குறைவு, செடிகளின் உயிர்த்தொடர் அதிகரிப்பு மற்றும் விளைச்சல் மேம்பாடு பெற முடியும் என்பதும் வலியுறுத்தப் பட்டது. நிகழ்வில் கலந்து கொண்ட விவசாயிகள் ஆர்வமுடன் கலந்துரையாடி, தங்களது வயல்களில் இந்த தொழில்நுட்பங்களை செயல்படுத்த முன்வந்தனர். சந்தேகங்களுக்கு தெளிவான விளக்கங்கள் வழங்கப்பட்டதுடன், எதிர்காலத்தில் மேலும் தொழில் நுட்ப விளக்க நிகழ்ச்சிகள் நடத்த ஏற்பாடுகள் செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சி, நிலைத்த மற்றும் நோயற்ற வாழை சாகுபடியை ஊக்குவிக்கும் முக்கிய முயற்சியாகவும், கிராம விவசாயிகளுக்கு பயனுள்ளதாகவும் அமைந்தது.

# தேசிய குடற்புழு நீக்க தின விழிப்புணர்வு முகாம்






சேலம், பிப்.13

தேசிய குடற்புழு நீக்க தினத்தை முன்னிட்டு, சேலம் மாவட்டம், பனைமரத்துப்பட்டி வட்டாரத்தில் விழிப்புணர்வு மற்றும் செயல்முறை விளக்க முகாம் நடைபெற்றது. பனைமரத்துப்பட்டி அரசு கால்நடை மருத்துவமனை மற்றும் பி.ஜி.பி வேளாண் அறிவியல் கல்லூரி மாணவர்கள் இணைந்து இந்த விழிப்புணர்வு பணியை மேற் கொண்டனர். கால்நடை மருத்துவர் டாக்டர் சுகன்யா தலைமையில், மருத்துவமனையில் தொடங்கிய இந்த முகாம், பின்னர் விவசாயிகளின் விளைநிலங்களுக்கே நேரடியாகச் சென்று தொடர்ந்தது.

**நிகழ்ச்சியின் சிறப்பம்சங்கள்**

**மாணவர்களின் பங்களிப்பு** : பி.ஜி.பி வேளாண் அறிவியல் கல்லூரி மாணவர்கள் விவசாயிகளிடையே குடற்புழு நீக்கத்தின் அவசியம் மற்றும் அதன் மூலம் கிடைக்கும் பொருளாதார லாபங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

**மருத்துவ விளக்கம்** : பசுக்களுக்கு குடற்புழு நீக்க மருந்து கொடுக்கும் சரியான முறை மற்றும் அளவு குறித்து டாக்டர் சுகன்யா, நேரிடையாகச் செய்து காட்டினார். மாணவர்களும் இதில் துணையாகச் செயல்பட்டனர்.